# பளியர் இனமக்களின் தொழில் முறைகள்

**த. உஷா நந்தினி நாச்சியார் & முனைவர். எம். ஏ. சிவராமன்**

**பழங்குடி மக்கள் ஆய்வு மையம்,**

**தமிழ்ப் பல்கலைக்கழகம்,**

**தஞ்சாவூர்**

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழகத்தில் பல பகுதிகளில் பல வகையான பழங்குடி இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களிடையே பளியர் இன மக்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இம்மக்களிடையே காணப்படும் தொழில் முறைகள் பிற பழங்குடி இன மக்களிடமிருந்து வேறுபட்டு காணப்படுகிறது.பளியர் இன மக்கள் வசிக்கும் பகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளது. பளியர் பெயர்க்காரணம் பற்றி அமைகின்றாது. இம்மக்களை பற்றி எட்கர் தர்ஸ்டன், ஆ. சிவசுப்பிரமணியன், ஜே. ஹட்டன் போன்ற அறிஞர்களின் கருத்து பளியர் இன மக்களின் நிலைகளை வெளிக்கொணரும்வகையில் அமைகின்றன. இம்மக்கள் தொழிலுக்கு செல்வதற்கான நோக்கம் இடம்பெறுகின்றது. இவர்களின் தொழில் முறைகளால் இம்மக்களின் தனித்தன்மையை அறிய முடிகின்றது.

பளியர் இன மக்களின் தொழில் முறைகளாக வேட்டைக்கலை, மீன் பிடிதல், தேன் சேகரித்தல், கிழங்கு எடுத்தல், கல்பாசம் (கல்பாசி) எடுத்தல், காப்பி பழம் பறித்தல், மாரு வெட்டுதல், மட்டை எடுத்தல் போன்றவை இடம் பெறுகின்றன. வேட்டைக்கலை, மீன் பிடித்தல் மற்றும் தேன் சேகரித்தல் பிற பழங்குடி மக்களிடமும் காணப்படும் தொழிலாக இருந்தாலும் இத்தொழிலை கையாளும் முறையினால் இம்மக்கள் பிற பழங்குடி மக்களிடமிருந்து வேறுபட்டு காணப்படுகின்றனர். இத்தகைய பளியர் இன மக்களின் தொழில் முறையின் சிறப்பினை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைய உள்ளது.

**ஆய்வு நோக்கம்**

காடுகளிலும், மலைகளிலும் வாழ்ந்து வரும் பளியர் இன பழங்குடி மக்களின் வாழ்க்கை நிலைகளைப் பற்றி சமவெளிப் பகுதியில் வசிக்கும் பிற சாமானிய மக்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டுமென்பதும்,இம்மக்களை பற்றி ஆய்வாளர்கள் அதிகம் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்துடனும், இவர்களின் தொழில் முறைகளைப் பற்றி மேற்கொள்ளாப்பட்ட ஆய்வுகளையும், மேலும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆய்வுகளைப்பற்றியும் சிந்திக்க தூண்டுகோளாய் அமையும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

ஒருவருடைய வாழ்வாதாரத்திற்கு தேவைப்படும் பொருளாதரத்தைதேடிச் செல்லக்கூடிய செயலே தொழில். செய்யும் தொழிலை அடிப்படையாகக் கொண்டு அவருடைய சமூகநிலை அமைகின்றது . மக்கள் தான் வாழும் இருப்பிடத்தைக் கொண்டு தொழில் முறைகளை அமைத்துக்கொள்கின்றனர். இதில் அடிப்படை வசதிகளையும், தேவைகளையும் எதிர்பாறாமல் மலைப்பகுதிகளிலும், வறண்ட பகுதிகளிலும் வசிக்கும் மக்களை நாட்டுப்புற மக்கள் அல்லது பழங்குடி மக்கள் என்று அழைக்கப்படுகின்றனர். பழங்குடி மக்கள் நிலவியல் சூழலுக்கு ஏற்றவாறு தங்கள் வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர் . அவர்களுள் பளியர் இனத்தைச் சார்ந்த மக்களும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள். இக்கட்டுரை பளியர் இனத்தைச் சார்ந்த மக்களின் தொழில் முறைகளைப் பற்றி ஆராய முற்படுகின்றது.

**பளியர் இன மக்கள்**

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் வாழும் பழங்குடி மக்களைப் போன்றுதமிழகத்திலும் பல மாவட்டங்களில்தொன்மை நாகரிகத்தின் சாயல் படிந்த பழங்குடி இன மக்கள் பலர் வாழ்ந்து வருகின்றனர் . இவர்களுல் மிகவும் பழமை வாய்ந்ததொன்மையைக் கொண்டு வாழ்ந்து வருபவர்கள் பளியர் இன மக்கள்."1961 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் வட ஆற்காடு , தென் ஆற்காடு, நீலகிரி , மதுரை , திருச்சிராப்பள்ளி ,இராமநாதபுரம்,திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் வாழ்ந்த பளியர் மக்களின் எண்ணிக்கை 1851 ஆக இருந்துள்ளது"[1]. கொடைக்கானல் மலைப்பகுதி , ஆண்டிப்பட்டி மலைப்பகுதி,

போடி அகமலை , ஊத்தாம்பாறை, முந்தல் , கொட்ட க்கடி, வேலப்பர்கோயில் ஆகிய பகுதிகளிலும் , விருதுநகர் , திருநெல்வேலிமாவட்டங்களில் சுந்தரமகாலிங்கம் , சந்தனமகாலிங்கம் , வண்டிப்பனை, தாணிப்பாறை , பிளவை க்கால், வத்திராயிருப்பு , கூமாபட்டி , கன்சாபுரம், அத்திக்கோயில் , வினோபாநகர் , செண்பகத்தோப்பு ஆகிய பகுதிகளிலும் பழனி மலை மற்றும் அதனைச் சுற்றிய ஒருசில பகுதிகளிலும் பளியர் இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர் . பளியர் “பழியர்”எனவும் அழைக்கப்படுகின்றனர்.”பலியன்”அல்லது ”பழையர்”அல்லது “பழையோர்” (Paliyan, paliyar, pazhiaiyare) எனப்படுபவர்வேட்டைக்காரர்கள் தேன்சேகரிப்பவர்களாகவும்காணப்படுகின்றனர்.பளியர்கள்“பழையோர்” (ஆதிமக்கள்) என்றுபெயர் பெற்றிருந்தனர் . கால ஓட்டத்தில் ப ழையோர் ›பழியர் › பளியர்என்று ஆகிவிட்டது. பழனி மலை க்குரியபழனியன்“பளியர்” என்று மருவிட்டது.

**பளியர் பற்றிய அறிஞர் கருத்துக்கள்**

எட்கர் தர்ஸ்டன் பளியர் மக்களைப்பற்றிகூறும்போது‘பளியர்கள்’ மிகவும் பின்தங்கியஇனத்தை சார்ந்தவர்கள் . இவர்கள் சிறு சிறு குழுக்களாக ஆங்காங்கே சிதறிக் காணப்படுகிறார்கள் . புலையர்களைக்காட்டிலும் நாகரீகம் குறைந்தவர்களாக் காணப்படுகின்றனர்”[2] என்கிறார்.

ஆ. சிவசுப்பிரமணியன்“வரலாற்றுப் வெள்ளப்போக்கில்இருந்து ஒதுங்கி சிற்சிலகுழுக்கள்தனிமைப்பட்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ச்சி குன்றிய நிலையில் தேங்கி விட்டன , இவர்களில் பளியர்கள் உணவு தேடும் நிலையில் இருக்கிறார்கள்”[3]என்கிறார்.

ஜே. ஹட்டன்,“எளிமையான வாழ்க்கை நடத்துபவர்கள் . இவர்கள் விவசாயம் செய்வது கிடையாது . காட்டிலுள்ள பொருட்களை ச் சேகரிக்கும் இயல்பினர் . அணிந்துகொள்ளும் ஆடைகளை த் தவிர இவர்களுக்கென்று தனிப்பட்ட சொத்து எதுவும் இல்லை. இவர்கள் காடுகளில் இருந்து வசதியான தேன், மெழுகு போன்றப் பொருட்களை கொடுத்து விற்று அரிசி முதலிய பொருள்களை அவர்களுடைய தேவைக்கு வாங்கிக் கொள்கிறார்கள் . அவர்கள் கிழங்கு தோண்டுவதற்கு கையில்

குச்சி வைத்து இருப்பதால் மலைப்பண்டார த்தைப் போ ல் காணப்படுகிறார்கள்”[4]என்கிறார்.

**பளியர் இன மக்களின் தொழில்கள்**

பணம் ஈட்ட வேண்டும் என்கிற நோக்கில் பளியர் இன மக்கள் தொழில்கள் செய்வதில்லை. தனது அடிப்படை தேவைகளை ப் பூர்த்தி செய்து கொள்வதற்கு மலைக்குச் சென்று வருகின்றனர் . குறிப்பிட்டுச் சொல்வதென்றால் உணவுத் தேவையின் பொருட்டே தொழில் செய்து வருகின்ற னர். நிலையான அதிக வருவாய் வீட்டு கூடிய தொழில் ஏதும் இவர்களிடம் இல்லை . மலைகளில் இயற்கையாகக் கிடைக்கக்கூடிய பொருட்க ளைச் சேகரிப்பது இவர்களது தொழில் ஆகும். அத ன்அடிப்படையில் தேன் , மரப்பட்டைகள் , மூலிகை வேர்கள் , வள்ளிக்கிழங்கு, கீரை வகைகள் மற்றும் காளான் ஆகியவற்றைச் சேகரித்து விற்பதன் வாயிலாக க் பெறக்கூடிய தொகையில் தனதுவாழ்வாதாரத்தை உறுதிப்படுத்திக் கொள்கின்றார்கள்.

**வேட்டைக்கலை**

காடுகளில் வேட்டையாடுவதற்கு அரசு தடைவிதித்துருப்பதால் தங்களுக்குத் தெரிந்த வேட்டைக்கலை மற்றும் நுட்பங்களை இம்மக்கள் படிப்படியாக கைவிடத் தொடங்கினர். வேட்டை முறை குறித்து இவர்களின் மரபுசார்ந்த அறிவு என்பது பண்டைய இனக்குழு வாழ்வின் எச்சங்க ளே இப்ப ளியர் இன மக்கள் என்பதை உணர்த்துவதாக உள்ளது.

வேட்டைக்கென்றெ நாய்களைப்பழக்குகின் றார்கள். அதன் வாயிலாக முயல் , உடும்பு போன்ற சிறு உயிரினங்களை வேட்டையாடி உணவாக்கிக் கொ ண்டு உண்ணுகின்றனர். நாயினை குட்டியாக இருக்கும்போதே வேட்டைக்குரியது,காவலுக்குரியது எனப்பிரிக்கின் றார்கள். வேட்டைக்குரிய நாயினைப்பக்குவமாகப் பராமரிக்கின் றார்கள்.வேட்டை நாய்க்குஅதிக அளவில்உணவுதருவதில்லை. தக்கபருவம் வந்ததும் உடும்பு பிடிக்கின்றநாய்களுக்குத்தனியாகவும், முயல் பிடி க்கின்ற நாய்களுக்கு த் தனியாகவும் பயிற்சி கள் அளி க்கின்றார்கள். உடும்பின் உறுப்புகளில் பித்தப்பையினையும். சாணிவண்டு எனப்படும் ஒருவகை வண்டினையும்ஒன்றாகக் கசக்கி நாயின் மூக்கில்வைத்து ஊதுகின் றார்கள். இ த்தகைய பயிற்சி யினைப் பெற்ற நாய்உடும் பு இரு க்கும் இடத்தைக்கண்டுபிடித்து,அதனைக் கவ்விக்

கொண்டு வருகின்றது . அதற்குப் பரிசாக நாய்க்கு உடும்பின் உடலில் சில பாகங்களைவழங்கப்படுகின்றது.

பளியர்களின் வேட்டைமுறைகளில்தண்ணீர்வைத்துப்பிடிக்கும்முறை காணப்படுகிறது.

இவர்களிடையேபலவகையானவேட்டைமுறைகள்இருக்கின்றனர்.

**மீன் பிடித்தல்**

பளியர் இன மக்கள் மீன் பிடித்தலுக்காக செல்லுகின்றபோது ஒருவர் அல்லது பலர் சேர்ந் தே செல்கின் றார்கள்.மீன் பிடிக்கும் நீர்நிலைகளில் ஆழம் குறைந்த பகுதிகளில் ஒரு வகை தாவரத்தின் வேர் பகுதியினை அரைத்து மந்திரம் சொல்லி மீன் அதிகம் உள்ள நீரோட்டம் இல்லாத பகுதியில்கலக்குகின்றார்கள் . இத்தாவரத்தின் வேரில் உள்ள ஒருவகை மூலிகை மீன்களை மயக்கம் அடைய ச் செய்கின்றது. இவ்வாறு மயங்கி மிதக்கின்ற மீன்களில் பெரிய வகை மீன்களை மட்டும்எடுத்துக்கொண்டுசிறியவகை மீன்களை தண்ணீரில் விட்டுச் செல்கின்றார்கள்.இவ்வாறு விட்டுச் சென்ற சிறிய வகை மீன்கள் சிறிது நேரத்தில் மீண்டும் உயிர்பிழைத்துவிடுகின்றன . இவ்வாறு செய்வதால் சிறிய வகை மீன்கள் காப்பாற்றப்படுகின்றன. சிறிய வகை மீன்களை அழிவிலிருந்துபாதுகாக்கப்படும் சிறந்த வழிமுறையாக இதனைப் பளியர் இன மக்கள்கையாளுகின்றார்கள்.

**தேன் சேகரித்தல்**

பளியர் பழங்குடி மக்களின் பரம்பரைத் தொழில் தேன் சேகரித்த லாகும். தேன் எடுத்தலில்பளியர்கள் இருவகையான உத்திமுறை களைக் கையாளுகின்றார்கள் . மழையின் உயரமான பாறைகளிலும் , மரங்களிலும் , ஆழமான பள்ளத்தாக்கு பகுதிகளிலும் காணப்படுகின்றதேன்கூடுளில்உள்ள தேனை சேகரிக்கின்றார்கள் பளியர்கள். பலபேர் தேன் எடுப்பதற்கு செல்லுகின்ற பொழுது ஒருவர் தேன்கூட்டினைக் கண்டவுடன் அதை தன்னுடன் வந்தவர்களுக்கு அறிவிக்க ஊ……ஊ……என்கின்ற ஒசையினை எழுப்புகின்றார்கள் . அந்தஓசையினைக்கேட்டமற்றவர்கள்ஓசைகேட்கும்இடத்தைநோக்கிச்செல்கின்றன ர். உயர்ந்தமரக்கிளைகளில் உள்ள தேனினை எடுப்பதற்கு மூங்கிலின் உதவியுடன் தேன் கூட்டுக் அருகில் செல்கின்றார்கள் . இப்பளியர் இன மக்கள் வெள்ளைப் பூண்டு,சிறு வெங்காயம் ஆகிய இரண்டையும் வாயிலிட்டு நன்கு மென்று தேன் கூட்டின் மீத ஊதுகின்றார்கள். இதனால் தேனீக்கள் பறந்து விடுகின்றன . உடனே தேன் அடைகளை பாத்திரத்தில் எடுத்து அதை கயிற்றின் உதவியுடன் மரத்தின்

கீழே இருப்பவர்களிடம் தருகின்றார்கள். மற்றொரு முறையாக காய்ந்த ஒரு வகை சருகினை பந்து போன்று சுருட்டி அதன்மேல் பச்சிலை கொடியினைச் சுற்றி அதனை கம்பியால் கட்டி தீ மூ ட்டுகின்றனர். அதன் உள்ளே உள்ள சருகு எரிந்த பின்பு வெளியே புகையினை உருவாக்குகிறது . அதனை தேன் கூடு இருக்கும் மரக்கிளையின் மீது ஏரி கயிற்றின் உதவியுடன் மேலே இழுத்து தேன் கூட்டின் அருகில் அப்புகையினை காட்டுகின்றனர். இதனால் தேனீக்கள் ப றந்து விடுகின்றன. பின்னர் தேன் அடைகளை எடுக்கின்றார்கள். எடுத்த தேனினை மெல்லிய தகட்டினால் ஆனால் பெட்டிகளில் சேகரித்து பயன்படுத்துகின்றன ர். ஒரே மாதத்தில் முப்பதிற்கும் மேலான தேன்கூடுகள் இருக்கின்றன . அதை இரவு நேரங்களில் சென்று தேன் எடுக்கின்றார்கள்.

**கிழங்குஎடுத்தல்**

பளியர் மக்களின்முக்கியத்தொழில்கலளில்ஒன்றானகிழங்குஎடுத்தல் காணப்படுகிறது. இவர்களின்முதன்மைத்தொழிலாகவும் கிழங்கு எடுத்தல் திகழ்கின்றது. பெரும்பாலும்கிழங்குஎடுத்தல்இவர்கள்விருப்பத்தோடு செய்கின்றஒருதொழிலாகஉள்ளது.

பளியர்இனப்பெண்ஒருவர்கூறுகையில்கிழங்குமட்டும்இருந்தால்போதும்வேறுஎது வும் உண்பதற்கு வேண்டாம் என்று கிழங்கின்பெருமையைப்பேசுகிறார். கிழங்கினைஎடுக்கபெரும்பாலும்வெயில்காலங்களையேதேர்ந்த்தெடுக்கின்றனர். காரணம்அக்காலங்களில்தான்கிழக்குநன்குமுற்றியும்,

பெருத்தும்இருக்கும்என்கின்றார்கள்.

**கல்பாசம் (கல்பாசி) எடுத்தல்**

பளியர் இனப்பழங்குடி இளைஞர்கள் வேலைகள் ஏதும்இல்லாத நாட்காளில் மலைகளில் உள்ள மரங்களில் கல்பாசம் (கல்பாசி) என்னும் தாவரப்பூ வினை எடுப்பதற்குச் செல்கின்றனர். இது பிரியாணி என்னும் புலால் உணவில் சேர்க்கப்படும் சுவை ஊட்டும் ஒறுவகை நறுமணப்பொருள்ஆகும். ஒருநாளைக்குஒன்றுமுதல்இரண்டு கிலோ வரையில் கிடைக்கின்றது. இக்கல்பாசியினை கிலோ நூறு ரூபாய் முதல் நூற்றைம்பது ரூபாய் வரைவிற்பனை செய்கின்றார்கள்.

**காப்பிபழம்பறித்தல்**

இன்றையபளியர் இன மக்கள்தங்களின்அன்றாடதேவைகளுக்காக காப்பித்தோட்டவேலையை அதிகம் செய்து வருகின்றார்கள். இப்பளியர்களுக்கு சொந்தமாக நிலங்கள் இல்லாத காரணத்தால் சமவெளியில் வசிக்கும் பிறஇனத்தினர்தோட்டத்திற்குகாப்பிபழம்பறிக்கச்சென்றுவருகின்றார்கள். இவர்களில் ஆண்களுக்கு 200 முதல் 180 வரையிலும் ஊதியம் கிடைக்கி ன்றது. பளியர்கள் பெரும் முதலாளிகளை ச் சம்சாரி என்றும் அழைக்கின்றனர் .பளியர்கள் மலைகளின் பூர்வகுடி என்று அழைக்கப்பட்டாலும் தங்களுக்கு என்று சொந்தமாக நிலம் அற்றவர்களாக இருக்கின்றார்கள் . இவர்களுல் ஒரு சிலர் மட்டுமே ஒன்று அல்லது இரண்டு ஏக்கர் நிலம் வைத்துள்ளதாக கூறுகின்றார் கள்.பளியர்களின் தேவைகளைபூர்த்தி செய்வது தோட்ட வேலைதான் என்று இவர்கள் கருதுகின்றார்கள்.

**மாறு வெட்டுதல்**

வேலை இல்லாத நாட்களில்பளியர் இனத்தைச் சார்ந்த பெண்கள் வீடு பெருக்க பயன்படும் விளக்கமாறு (துடைப்பம்) குச்சி வெட்டுவதற்கு ச் செல்கின்றனர் . இதனையே ப ளியர் இனத்தைச் சார்ந்த மக்க ள் மா ரு வெட்டுதல் என்று கூறுகின்றார்கள். இதற்காக மலைகளின் மேல் பல மைல் தூர ம் பயணம் செய்துவருகின்றார்கள்.

**மட்டை எடுத்தல்**

பளியர் மக்கள் காப்பி தோட்டவேலை இல்லாத நாட்களில் மட்டை எடுக்க செல்கின்றார்கள். வாழைமரத்தில் இருக்கும் தேவையற்ற மட்டைகளை நீக்கும் வேலையை மட்டை எடுத்தல் எனக் குறிப்பிடுகின்றார்கள். இவ்வாறு பளியர் இனப் பழங்குடிகள் விவசாயம் செய்ய தகுந்த நிலம் இல்லாத போதிலும் காட்டில் கிடைக்கின்ற இயற்கை உணவுகளைச் சேகரித்துவாழ்ந்து வருகின்றார்கள்.

**முடிவுரை**

மனித இனத்தின் தோற்றுவாயாக இருந்த மலைப்பகுதிகளிலும் , குகைகளிலும், மரங்களிலும் வாழ்ந்து வந்த பழங்குடி இனத்து மக்கள் இன்று விளிம்பு நிலை மக்களாக தள்ளப்பட்டு வாழ்வதற்கு ஏற்ப அடிப்படை வசதிகள் இன்றி தங்களின் அடையாளத்தை பண்பாட்டை பூர்வீக நிலங்களை விட்டு வர மனமில்லாமல் வாழ்ந்து கொண்டு இருக்கும் இம்மக்களுக்கு அர சுசெய்ய வேண்டிய அடிப்படை

வசதிகளை அரசு செய்து தர முன்வர வேண்டும் , என்பதே இம்மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

**சான்றாதாரம்:**

1. Ethnographic Notes and Schedul Tribes Census of India, p – 197.
2. எட்கர் தர்ஸ்டன், தென்னிந்திய சாதிகள் பழங்குடிகள், பக்கம். 461
3. ஆ. சிவசுப்பிரமணியன், தமிழ்நாட்டு பளியர்கள், ஆராய்ச்சி இதழ் -3, பக்கம். 304-305.
4. ஜே. ஹட்டன், இந்தியாவில் சாதிகள், பக்கம். 9.